# பரிசுத்த வேதவசனங்களின் மேட்டர்ஹார்ன்

## (8:35-39)

*உலகத்தின் மிகப்புகழ்பெற்ற மற்றும் கம்பீரமான மலைகளில் ஒன்றான மேட்டர்ஹார்ன் என்பது, 14,692 அடிகள் (4,478 மீட்டர்கள்) உயரமுள்ளதாக, ஆல்ப்ஸ் மலைத்தொடரில் ஸ்விட்சர்லாந்து மற்றும் இத்தாலி நாடுகளுக்கு இடையிலான எல்லைப்பகுதிகளில் அமைந்துள்ளது. ஸ்விட்சர்லாந்தின் பகுதியிலிருந்து இம்மலையின்மீது ஏறுதல் கடினமானதாக இருக்கையில், அது அனுபமிக்க மலை ஏறுபவர்களால் ஏற்கனவே சாதிக்கப்பட்டுள்ளது. இத்தாலியப் பகுதிகளிலிருந்து ஏறுதல் என்பது அப்படியிருப்பதில்லை, அது சமமட்ட சுவராகவும் மிகவும் பேராபத்திற்குரியதாகவும் இருக்கிறது. ஜூலை 14, 1865 வரையில் இத்தாலியப் பகுதியிலிருந்து இம்மலை உச்சிக்கு யாரும் ஏறிச்சென்றது இல்லை. ஒரு வழிகாட்டி உட்பட, மலையேறுபவர்களின் மூவர் குழு ஒன்று, அந்த அபாயகரமான சுவர்களில் ஏறிச்சென்றபோது தங்கள் உயிரை இழந்தனர், அங்கு தவறான அடிவைத்தல் என்பது ஏறக்குறைய மரணம் என்றே அர்த்தப்படுகிறது. மேட்டர்ஹார்ன் சிகரமானது அந்தப் பகுதியிலுள்ள மற்ற சிகரங்களைப்போல் உயர்ந்தது அல்ல, ஆனால் அதைக்குறித்த மாபெரும் பெருமையும் கம்பீரமும் ஒன்றுள்ளது. சூரிய உதயம் அல்லது சூரிய மறைவு நேரத்தில், இந்த மலை செந்நிற ஒளிப்பிழம்பாகக் காட்சியளிக்கிறது. இம்மலையின் அழகானது "விவரிக்க இயலாதது" என்று கூறப்பட்டுள்ளது.*

*வேதாகமத்தின் கம்பீரமான பல பகுதிகள் மேட்டர்ஹார்னை நமக்கு நினைவுபடுத்துகின்றன. எடுத்துக்காட்டாக, பழைய ஏற்பாட்டில், நாம் உபாகமம் 33:27அ, ஏசாயா 40:31 மற்றும் மீகா 6:8 போன்ற பகுதிகளைக் கொண்டுள்ளோம். இருப்பினும், இந்தப் பாடத்திற்கு நாம் புதிய ஏற்பாட்டில் இலக்கியநடையில் விசுவாசத்தின் மாபெரும் சொல்விளக்கம் என்று அழைக்கப்படும் - ரோமர் 8:38, 39 என்ற - இரண்டு வசனங்களிடத்தில் செல்லுகிறோம்:*

> *மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்.*

*“பரிசுத்த வேதவசனங்களின் இந்த மேட்டர்ஹார்னை” பாராட்ட நமக்கு உதவுவதற்கு, நான் நமது பாடத்தை 35ம் வசனத்துடன் தொடங்க விரும்புகிறேன். பின்பு உருவக நடையில் கூறுவதென்றால், நாம் “மலையின் மேல்நோக்கிய சரிவில் நமது பாதையை ஏற்படுத்துவோம்.”*

## *ஏற்றம் (8:35-37)*

***அன்றாடப் பிரச்சனைகள் (வசனங்கள் 35, 36)***

*நமது வேதவசனப்பகுதியில் சொல்திறன் மிக்க கேள்வியொன்று உள்ளது: “கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்?” (வசனம் 36அ). அந்த அன்பைப் பற்றி 5ம் அதிகாரம் விவரித்தது:*

> *அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும்போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார். நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறது அரிது; நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத் துணிவான். நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார் (வசனங்கள் 6-8).*

*திகைப்படையச் செய்யும் அந்த அன்பிலிருந்து நம்மை யாரால் பிரிக்க முடியும்? “எவரொருவரும் இல்லை - மற்றும் ஏதொன்றும் இல்லை” என்பதே பவுலின் கேள்விக்கு மறைமுகமான பதிலாயுள்ளது. ஜான் R. W. ஸ்டாட் என்பவர், “நமது கிறிஸ்தவ நம்பிக்கையானது தேவனுடைய தடுமாற்றமில்லாத அன்பில் திடமாய் வேரூன்றியிருக்கிறது” என்று எழுதினார்.[1]*

*பவுலின் நாட்களிலிருந்த கிறிஸ்தவர்கள் எதிர்கொண்டிருந்த சோதனைகளைப் பட்டியலிடுதல் மூலம் அவர் தமது கேள்வியை விரிவாக்கினார்: “உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ?” (8:36ஆ). இந்தப்பட்டியலிலுள்ள முதல் இரண்டு வார்த்தைகள் “இடர்ப்பாடு” என்பதற்கான பொதுவான வார்த்தைகளாகும், ஆனால் அவை ஒவ்வொன்றும் சற்றே மாறுபட்ட வலியுறுத்தத்தைக் கொண்டுள்ளன. “உபத்திரவம்” என்பது “அடிப்படையில் ‘அழுத்துகிற ஒரு அழுத்தம்’ என்று அர்த்தப்படுகிற”[2] thlipsis என்ற வார்த்தையிலிருந்து வருகிறது. இது திராட்சப்பழங்களிலிருந்து சாறுபிழிந்தெடுப்பதற்காக அவற்றை மிதித்தல் என்பதற்குப் பயன்படுத்தப்பட்ட வார்த்தையாக இருந்தது. இடர்ப்பாட்டின் அழுத்தத்தை நீங்கள் அனுபவித்திருக்கிறீர்களா? வாழ்வினால் நீங்கள் அலைக்கழிக்கப்பட்டிருக்கிறீர்களா? ஆம் என்றால் நீங்கள், thlipsis என்ற வார்த்தை எதை அர்த்தப்படுத்துகிறது என்பதைப் புரிந்துகொள்வீர்கள்.*

*“வியாகுலம்” என்பது, குறுகலான அல்லது கட்டுப்பாடு செய்யப்பட்ட இடத்தைக் குறிப்பிடும் (stenos [“குறுகலான”] கூட்டல் chora [“ஒரு இடம்”] என்ற வார்த்தைகள் இணைந்த) stenochoria என்ற கிரேக்கக் கூட்டு வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[3] எப்போதாவது நீங்கள் மூச்சுவிட வழியின்றி ஒரு பிடிப்புக் குறட்டில் கசக்கிப் பிழியப்பட்டதுபோல் உணர்ந்திருக்கிறீர்களா? ஆம் என்றால், நீங்கள் stenochoria என்பது என்ன என்று அறிவீர்கள். Thlipsis மற்றும் stenochoria ஆகியவை ஒன்றிணையும்போது, அவைகள் முறையே, “புறம்பான*

உபத்திரவத்தையும் உள்ளான வியாகுலத்தையும் குறிக்கின்றன"[4] என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விரு சொற்றொடர்களும் பிரச்சனை யினுடைய ஒவ்வொரு வகையையும் கற்பனை செய்யக்கூடிய ஒவ்வொரு இடர்ப்பாட்டையும் சூழ்ந்து வளைக்கின்றன.

பொதுவான சொற்றொடர்களைத் தொடர்ந்து, பவுலின் நாட்களில் கிறிஸ்தவர்களால் எதிர்கொள்ளப்பட்டிருந்த குறிப்பிட்ட பிரச்சனைகள் எடுத்துரைக்கப்பட்டன. "துன்பம்" என்று மொழிபெயர்க்கப்பட்ட (*diogmos* என்ற) வார்த்தையானது, வேட்டையாடுபவரால் ஒரு விலங்கு துரத்தப்படுவது போன்று, துரத்தப்பட்டுக்கொண்டிருத்தலைக்[5] குறித்தது. LB பொழிப்புரை வேதாகமத்தில், "நாம் வேட்டையாடப்பட்டிருக்கும்போது" என்றுள்ளது. "சபையானது ஆக்கிரமிக்கப்பட்ட எல்லையிலும் இரக்கமற்ற சர்வாதி காரிகளின்கீழும் பிறந்தது," அவர்கள் கிறிஸ்தவர்களைத் துரத்திப்பிடித்து துன்பப்படுத்தினார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. "பசி" (*limos*, உணவுக்குறைவு) மற்றும் "நிர்வாணம்" (*gumotes*, உடைகுறைபாடு) ஆகியவை, கிறிஸ்துவைப் பின்பற்றியதால் உண்டான பொருளாதார விளைவுகளைக் குறிப்பிடக்கூடும்.

"நாசமோசம்" (*kindumos*) என்பது "அபாயம்" என்பதற்கான பொதுவான வார்த்தையாக இருக்க, "பட்டயம்" (*machaira*) என்பது வன்முறையான மரணம் மற்றும் மரணதண்டனை உட்படப் பல கொடிய உள் அர்த்தங்கள் கொண்டுள்ளது. வேதசாட்சியாக மரணம் அடைந்த முதல் அப்போஸ்தலர், யாக்கோபு "பட்டயத்தினாலே கொலை" செய்யப்பட்டார் (நடபடிகள் 12:2). ரோமருக்கு எழுதிய நிருபத்தில் அபாயங்களின் பட்டியலில் "பட்டயம்" என்ற வார்த்தையை உள்ளடக்குதல் பற்றி ஏறக்குறைய, தீர்க்கதரிசனப் பண்புகள் சில உள்ளன. ஒரு சில ஆண்டுகளில் பட்டயமானது ரோமாபுரியில் திரும்பத் திரும்பச் சுழலும், மற்றும் கிறிஸ்தவர்களின் இரத்தம் நகரமுழுவதிலும் இருந்த அரங்குகளின் மணலை ஈரமாக்கும்.

பட்டியலைத் திரும்பவும் கண்ணோக்கி, இன்றைய நாட்களில் பின்வரும் வார்த்தைகள் செய்தித்தாள்களில் கொட்டை எழுத்துத் தலைப்புக்களில் அச்சிடப்படுவதாகக் கற்பனை செய்து பாருங்கள்: **"உபத்திரவம்! வியாகுலம்! துன்பம்! பசி! நிர்வாணம்! நாசமோசம்! பட்டயம்!"** "இவையாவும் அன்பின் மென்மையான அணைப்பைத் தவிர மற்ற விஷயம்போன்று காணப்படுகின்றன."[6] உண்மையில் தகவல் பெற்றிராத ஒருவருக்கு, இவ்வித மாகச் சுமைசுமத்தப்படும் ஒருவர் தேவனால் கைவிடப்பட்டவராக மற்றும் ஒருவேளை தேவனால் துன்புறுத்தப்படுபவராகக்கூடத் தோன்றுவார். இந்த பயங்கரங்களில் *எதுவும்* அவர்களை [ரோமாபுரியிலிருந்த கிறிஸ்தவர்களை] தேவனுடைய அன்பிலிருந்து பிரிக்காது அல்லது பிரிக்க இயலாது என்று பவுல் உறுதிப்படுத்தினார்.

பவுல் சொந்த அனுபவத்திலிருந்து பேசிக்கொண்டிருந்தார். 2 கொரிந் தியர் 6:4, 5; 11:26, 27; 12:10 ஆகிய வசனங்களில், கர்த்தருக்காக அவர் உட்பட்டிருந்த சோதனைகள் பற்றிய அவரது விவரத்தை கண்ணோக்குங்கள். அதில் நீங்கள் ரோமர் 8:36ல் பட்டியலிடப்பட்ட - "பட்டயம்" என்பது தவிர - ஒவ்வொரு துன்பத்தையும் காண்பீர்கள். பட்டயமானது இன்னமும் (அவர் இந்த நிருபத்தை எழுதிய வேளையில்) பவுலின் தலையை அவரது

உடலிலிருந்து துண்டிக்கவில்லை, ஆனால் தொடக்ககாலக் கிறிஸ்தவர்களின் கூற்றுப்படி, கடைசியில் அதுவும் (பட்டயத்தால் துண்டிக்கப்படுதலும்) ரோமாபுரி நகரத்தில் அவருக்கு நடந்தது.[7] ஆகவே அப்போஸ்தலர், தாம் தேவனால் கைவிடப்பட்டதாக அல்லது தேவனால் துன்புறுத்தப்படுவதாக முடிவு செய்தாரா? இல்லை, அதற்குப்பதிலாக அவர், "... இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; ... என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமார[ன்]" என்று கூறினார் (கலாத்தியர் 2:20).

நமது வேதபாட வசனப்பகுதியில் இவ்விடத்தில், பவுல் சோதனைகளும் உபத்திரவமும் தேவனுக்காக வாழ்தலின் இயல்பான, எதிர்பார்க்கப்படும் பாகங்களாக இருக்கின்றன என்பதை வலியுறுத்தத் தாமதித்தார் (ரோமர் 5:3; 8:17; நடபடிகள் 14:22ஐக் காணவும்). இதை அவர் சங்கீதங்களின் புத்தகத்திலிருந்து மேற்கோள் காண்பிப்பதன்மூலம் செய்தார்: "உமதுநிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும்" (ரோமர் 8:35; சங்கீதம் 44:22ஐக் காணவும்).

சங்கீதம் 44, பாபிலோனிய அடிமைத்தனத்தின்போது எழுதப்பட்டது என்று பலர் நினைக்கின்றனர் (வசனங்கள் 11, 14ஐக் காணவும்). அது கடந்தகாலத்தில் தேவன் தமது மக்களை விடுவித்திருந்தது போன்று (வசனங்கள் 1-8). அப்போதும், இஸ்ரவேல் மக்களை அவர்களின் இடர்ப்பாடுகளிலிருந்து விடுவிக்கும்படித் தேவனிடத்தில் ஏறெடுக்கப்பட்ட ஒரு விண்ணப்பமாக உள்ளது (வசனம் 26). இந்த சங்கீதத்தின் இருதயம் போன்ற மையப்பகுதியில் பின்வரும் வருத்தம் தோய்ந்த கதறுதல் உள்ளது: "உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம்; அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்படுகிறோம்" (வசனம் 22). "உமது நிமித்தம்" என்ற சொற்றொடர், அவர்கள் கர்த்தரைப் பின்பற்றுபவர்களாக இருந்ததே அவர்களுடைய உபத்திரவங்களுக்குக் காரணமாயிருந்தது என்று கருத்துத் தெரிவிக்கிறது.[8]

"எந்நேரமும் கொல்லப்படுகிறோம் [மரணத்திற்கு உட்படுத்தப்படுகிறோம்]" என்பது பற்றி, எபிரெயர் 11: 37ம் வசனம் ஒரு நல்ல விளக்கத்தை அளிக்கிறது: "கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சைபார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித்தார்கள்." கொல்லப்படுவதற்கு நியமிக்கப்பட்ட செம்மறி ஆட்டின் உருவகமானது உதவி இல்லாத நிலையின் கருத்தைத் தூண்டுகிறது. பவுல் சங்கீதம் 44ல் இருந்து இவ்வசனப் பகுதியை, கர்த்தரை பின்பற்றுபவர்கள் தவறாக நடத்தப்படுவதை எதிர்பார்க்கக் கூடும் என்ற சிந்தனையை மறுவலியூட்டப் பயன்படுத்தினார்.

**ஒரு தெய்வீக வாக்குத்தத்தம் (வசனம் 37)**

தவறாக நடத்தப்படுதல் என்பது நமது பங்காக இருக்க வேண்டியது என்றால், நாம் பெரும்வருத்தம் அடைய வேண்டுமா? இல்லை. 37ம் வசனத்தில் பவுல், 36ம் வசனத்தில் பட்டியலிடப்பட்ட சோதனைகளைக் குறிப்பிட்டார்: "இவையெல்லாவற்றிலேயும் [உபத்திரவம், வியாகுலம்,

துன்பம், பசி, நிர்வாணம், நாசமோசம், பட்டயம் ஆகியவற்றில்] நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே." "முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே" என்பது *hupernikomen* என்ற ஒரு வார்த்தையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த அரிதான கிரேக்க வார்த்தை வேத வசனங்களிலேயே இந்த ஒருமுறை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது "மேலே" என்பதற்கான (*huper*[9] என்ற) முன்னிடைச் சொல்லுடன் "வெற்றிகொண்டிருக்க" என்று அர்த்தப்படும் (*nikao*[10] என்ற) வார்த்தையை ஒன்றிணைக்கும் சொல்லாக உள்ளது. *Super* என்பது, "மீது" அல்லது "மேலே" என்பதற்கான லத்தீன் வார்த்தையாகும். இவ்வாறாக CJB வேதாகமத்தில், "in all these things we are superconquerors" என்றுள்ளது. நான், "We are more than conquerors" என்ற KJV சொற்றொடருடன் வளர்ந்தேன். C. E. மெக்கார்ட்டினி என்பவர் பின்வரும் விவரிப்பைக் கொடுத்தார்:

> நெல்சன் பிரபு, நைல் யுத்தத்தில் பிரெஞ்ச்சுப் படைக்கெதிரான தமது மாபெரும் வெற்றியை பிரிட்டிஷ் உயர்அதிகாரியிடத்தில் அறிவித்தபோது, அவர் "வெற்றி" என்பது அங்கு நடைபெற்றதை விவரிக்கப் போதுமான அளவு பெரிய வார்த்தையாக இருக்கவில்லை என்று கூறினார்.
>
> பவுல், சுகவீனங்கள் மற்றும் எதிர்ப்புகள் மற்றும் சோதனைகள் மற்றும் வாழ்வின் சாபக்கேடுகள் ஆகிய எல்லாவற்றின்மீதும், இயேசுகிறிஸ்துவின் மூலமாகத் தாம் பெற்றிருந்த வெற்றியைப்பற்றிப் பேசும்போது, அதை விவரிப்பதற்கு, வார்த்தைகள் எல்லாவற்றிலும் மாபெரும் வார்த்தையான, "வெற்றிகொள்ளுபவர்" என்பது போதுமானதாக இருக்கவில்லை; எனவே அவர் "நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே" என்று கூறினார்.[11]

கிறிஸ்தவர்கள் "முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாக" இருப்பதற்குப் பல வழிகள் உள்ளன. நாம் பிரச்சனைகளுக்குத் தப்பிப்பிழைத்தலினால் மாத்திரமல்ல, ஆனால் அவற்றின்மீது வெற்றிகொள்ளுதலினாலேயே "முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம்." நாம் வாழ்வின் அறைகூவல்களை சமாளித்தல் மட்டுமின்றி - அவற்றைத் தேவனுடைய உதவியுடன் சமாளிப்பதால் - நாம் மேன்மையான மக்களாவதற்கு அந்த அறைகூவல்களைப் பயன்படுத்துவதால், நாம் "முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம்." எல்லாவற்றிற்கும் மேலாக, மாபெரும் எதிர்ப்புகளுக்கு எதிரான போராட்டத்தில் தேவனுடைய கிருபை நம்மை வெற்றிகொள்ளச் செய்வதால் நாம், "முற்றிலும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம்." முடிவில் நாம் அவரது பிரசன்னத்தில் இட்டுச்செல்லப்படுவோம், அங்கு நாம் கற்பனை செய்யக்கூடிய எந்த விஷயத்தைக் காட்டிலும் மிகவும் பெரிதான வெகுமதியைப் பெறுவோம்.

37ம் வசனத்தின் ஆச்சரியமான வாக்குத்தத்தத்தை நீங்கள் புரிந்து உணருகையில், "நம்மில் அன்புகூருகிறவராலே[12]" என்ற வார்த்தையைக் காணாதுவிடவேண்டாம். பவுல் சுய-சார்பையல்ல, ஆனால் கிறிஸ்துவைச் சார்ந்திருத்தலைப் பரிந்துபேசினார். இயேசு, "என்னாலேயல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்று கூறினார் (யோவான் 15:5). பவுல், "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு" என்று கூறினார் (பிலிப்பியர் 4:13). மேலும் அவர், "நம்முடைய

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்றும் கூறினார் (1 கொரிந்தியர் 15:57). உலகமானது வெற்றிபெறுவதற்காக இயேசுவைச் *சுற்றிப்போக* முயற்சி செய்கிறது, ஆனால் அவர் *மூலமாக* மாத்திரமே வெற்றி சாத்தியமானதாக உள்ளது என்று பவுல் கூறினார்.

## மலையுச்சி (8:38, 39)

**பவுலின் விடாப்பிடியான வேண்டுகோள் (வசனங்கள் 38, 39அ)**

அது பவுல் சிகரத்திற்கு ஏறிச்செல்லுதலாக இருந்தது. நாம் மலையுச்சியிலிருந்து கண்ணோக்குதலுக்குத் தயாராயிருக்க வேண்டும். ரோமர் 8:39ம் வசனத்தின் கடைசியில், "என்று நிச்சயித்திருக்கிறேன்" என்றுள்ளது. பவுல், *peitho* ("நம்பியிணங்கச் செய்தல்") என்ற வார்த்தையின் செயப்பாட்டு வடிவத்தை பயன்படுத்தினார், இது சந்தேகத்திற்கு இடமின்றி, முற்றிலுமாக நம்பியிணங்கியிருத்தலைக் குறிக்கிறது. KJV வேதாகமத்தில், "I am persuaded" என்றுள்ளது மற்றும் NIrV வேதாகமத்தில், "I am absolutely sure" என்றுள்ளது.

பவுல் எதைப்பற்றி நிச்சயித்திருந்தார்? 36ம் வசனத்தில் அவர், "கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மை பிரிப்பவன் யார் (அல்லது எது)?" என்று கேட்டிருந்தார் (வசனம் 36அ). இப்போது அவர் தமது சொந்தக் கேள்விக்குப் பதில் அளித்தார்:

> மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன் (வசனங்கள் 38, 39).

வலிவார்ந்த "பிரிப்பாளர்கள்" பற்றிய பவுலின் பட்டியல் வரிசையில் பத்து விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. இவற்றை நாம், நமது ஆவிக்குரிய மேட்டர்ஹார்னின், பனிக்கட்டி மற்றும் பெய்பனி, துரத்தும் புயல்கள், பனிமலையின் அபாயகரமான ஆழ்வெடிப்புகள் மற்றும் செங்குத்தான சுவர்கள் என்பவைகளாக நினைக்கலாம். நாம் "நம்மில் அன்புகூருகிறவராலே" இவையெல்லாவற்றையும் "முற்றும் ஜெயங்கொள்ள" முடியும் (வசனம் 37). இவைகளில் *எதுவும்* நம்மைத் தேவனுடைய அன்பிலிருந்து பிரிக்கக்கூடியவைகளாய் இருப்பதில்லை.

38 மற்றும் 39ம் வசனங்களில் பவுலின் பட்டியலைப் பரிசோதிக்கச் சற்றுநேரம் எடுத்துக்கொள்ளுங்கள். அது மூன்று இணைகளுடன் - மரணம் மற்றும் ஜீவன், தேவதூதர்கள் மற்றும் வல்லமைகள், நிகழ் காரியங்கள் மற்றும் வருங் காரியங்கள் ஆகியவற்றுடன் - தொடங்குகிறது. இதன் மத்தியில் ஒரு தனிப்பட்ட விஷயம் வருகிறது: வல்லமைகள்.[13] பின்பு நீங்கள் உயர்வு மற்றும் தாழ்வு என்ற இன்னொரு இணையையும் அதைத் தொடர்ந்து தனிப்பட்ட ஒரு குறிப்பையும் காண்பீர்கள்: "வேறெந்தச் சிருஷ்டியானாலும்." வாழ்வின் பாதைவழியிலுள்ள ஒவ்வொரு தடையையும் விவரித்தல் என்பதல்ல, ஆனால் மாதிரியானவற்றைப் பதிவுசெய்தல் என்பதே இந்த அப்போஸ்தலருடைய

*நோக்கமாயிருந்தது. அவர் ஏதொன்றும், முற்றிலுமாக ஏதொன்றும், நம்மைத் தேவனுடைய அன்பினின்று பிரிக்கமாட்டாது என்பதை வலியுறுத்தச் சொற்றொடர்களைக் குவித்தார்.*

*நாம் அனேகமாக, தனிப்பட்ட ஒவ்வொரு பட்டியலையும் அதிகமாய் ஆராய்வதைத் தவிர்த்தாக வேண்டும்.* J. W. *மெக்கார்வி என்பவர், "[குறைக்கப்படுதலும்] இழப்புமின்றி விளக்க இயலாத உள்ளான பரவல் மிக்க தன்மையும் மாட்சிமையும் கொண்டுள்ள விஷயங்களின் ஆச்சரியம் நிறைந்த பட்டியல் ஒன்றை" பவுல் சமர்ப்பித்தார் என்று எழுதினார்.*[14] *இருந்தபோதிலும் ஒவ்வொரு சொற்றொடரையும் பவுல் உள்ளடக்கியது ஏன் என்று ஆழ்ந்து சிந்தித்து அறிதலில் மதிப்பு இருக்கலாம். இவை ஒவ்வொன்றும் சாத்தியமான எவ்வழியில் நம்மைக் கர்த்தரிடத்தில் இருந்து பிரிக்கக்கூடும்?*

*(1) மரணம் மற்றும் (2) ஜீவன். "மரணம்" (thanatos) என்பது சிலரின் பார்வையில் நாம் எதிர்கொள்ளுகிற மிகவும் பயங்கரமான விரோதியாக இருப்பதால் இங்கு முதலாவதாகப் பட்டியலிடப்பட்டிருக்கலாம். அவிசுவாசிக்கு மரணம் என்பது முடிவாக உள்ளது. விசுவாசம் இல்லாத ஒருவர், "அன்புள்ள ஜான் இனி இருப்பதில்லை" என்று எழுதுகிறார். இருப்பினும், மரணமானது கிறிஸ்தவரைத் தேவனிடத்திலிருந்தும் அவரது அன்பிலிருந்தும் பிரிக்க முடியாது. யாரோ ஒருவர், "தேவன் நம்மை மரணத்தின் தூளில் இழந்து போவதில்லை" என்று கூறியிருக்கிறார். தேவன்மீது விசுவாசமாயிருக்கும் அவரது பிள்ளைக்கு, மரணம் என்பது ஒரு சுவராக அல்ல, ஆனால் ஒரு கதவாக - கர்த்தருடைய பிரசன்னத்திற்குள்ளாக்கும் ஒரு கதவாக - உள்ளது. பவுல், "கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்" என்று எழுதினார் (பிலிப்பியர் 1:21). கொரிந்துவிலிருந்த கிறிஸ்தவர்களுக்கு, "மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது" என்று அவர் உறுதிப்படுத்தினார் (1 கொரிந்தியர் 15:54).*

*"ஜீவன்" (zoe) என்பது அடுத்ததாகப் பட்டியலிடப்பட்டுள்ளது. சில வேளைகளில் மக்கள், மரணத்தைக் காட்டிலும் ஜீவனை (உயிர்வாழ்வை) எதிர்கொள்வதை அதிகம் கடினமானதாகக் காண்கின்றனர். வாழ்வானது அலங்கோலமானது, வியாதிப்பட்டது, ஏமாற்றுவது மற்றும் எதையும் தனித்துக் குறிப்பிடாத ஒரு முட்டாளினால் கூறப்பட்ட கதையானது, மற்றும் பிறந்த குற்றத்திற்காக விதிக்கப்பட்ட சிறைத்தண்டனை என்று, எடுத்ததற்கெல்லாம் குற்றம்கண்டுபிடிப்பவரால் விவரிக்கப்பட்டுள்ளது. வாழ்வு என்பது தனிப்பட்ட வகையில் உங்களுக்கு எதைக் கொண்டுவந்தாலும், அது உங்களைத் தேவனுடைய அன்புமிக்க அக்கறையிலிருந்து பிரிக்க இயலாது என்பதை அறியுங்கள். பேதுரு, "அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர் [தேவன்]மேல் வைத்துவிடுங்கள்" என்று எழுதினார் (1 பேதுரு 5:7). சற்று முன்பு நான், பிலிப்பியர் 4:13ஐக் மேற்கோள் காண்பித்தேன். அந்த வசனத்தை சந்தர்ப்பப்பொருளில் நாம் ஆழ்ந்து சிந்திப்போம்:*

> *... நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக் கற்றுக் கொண்டேன். தாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத்தெரியும்; எவ்விடத்திலும் எல்லாவற்றிலும் திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும் குறைவுபடவும் போதிக்கப்பட்டேன். என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே*

எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு (பிலிப்பியர் 4:11ஆ-13).

*(3) தேவதூதர்கள் மற்றும் (4) அதிகாரங்கள்.* "தேவதூதர்கள் என்பதற்கான கிரேக்க வார்த்தை (*angelos* என்பதன் பன்மைச்சொல்) "தூதுவர்கள்" என்று அர்த்தப்படுகிறது, இது மாம்சப்பிரகாரமான தூதுவர்களை (மக்களை)[15] அல்லது ஆவிக்குரிய தூதுவர்களைக் (தேவதூதுவர்களை) குறிப்பிடக்கூடும். "அதிகாரங்கள்" என்பதுடன் இது இணைக்கப்பட்டுள்ளதானது, பவுல் ஆவிக்குரிய தூதுவர்களையே தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்று சுட்டிக்காண்பிக்கலாம். பவுல் தமது பட்டியலில் "தூதர்களை" உள்ளடக்கியது ஏன் என்பதை மிகச்சரியாக நாம் அறிவதில்லை, ஆனால் புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்திலிருந்த மக்களில் சிலர், தூதர்களை ஆராதித்துக்கொண்டிருந்தனர் (கொலோசெயர் 2:19). மற்றும், வேதாகம மானது மோசமான தூதர்களையும் நல்ல தூதர்களையும் பற்றிப் போதிக்கிறது (வெளிப்படுத்தின விசேஷம் 12:7ஐக் காணவும்). பவுல், "... வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்!" என்று எச்சரித்தார் (கலாத்தியர் 1:8). ரோமர் 8:38ல் பவுல் ஒருவேளை, "தூதர்கள் வல்லமைமிக்கவர்களாக இருக்கின்றனர், ஆனாலும் - நல்லவர்களோ அல்லது மோசமானவர்களோ - எந்த தூதனும் அல்லது தூதர்களின் குழுவும் உங்களைத் தேவனுடைய அன்பிலிருந்து பிரிக்க அதிகாரம் கொண்டிருப்பதில்லை" என்று எச்சரித்திருக்கலாம்.

"அதிகாரங்கள்" என்பது *arche* என்பதன் பன்மை வடிவத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டுள்ளது, இது "தொடக்கம்" என்னும் நேரடி அர்த்தப்படுகிறது மற்றும் இது "அதிகாரத்தில் முதலாவதான" என்று அர்த்தப்படக்கூடும். இவ்வார்த்தை மனிதரீதியான ஆளுநர்களைப் பற்றிப் பேசப் பயன்படுத்தப் பட்டது (லூக்கா 12:11), ஆனால் பவுல் இதை ஆவிக்குரிய வகையில் நம்மை அழிக்க முயற்சிசெய்யும் அசுத்தஆவியின் சக்திகளைக் குறிக்கப் பொதுவாகப் பயன்படுத்தினார் (எபேசியர் 6:12ஐக் காணவும்). NIV வேதாகமத்தில் "demons" என்றிருக்கையில் NEB வேதாகமத்தில் "superhuman powers" என்றுள்ளது. பொல்லாத இந்த ஆவிகள் பயங்கரமானவைகளாக இருந்தாலும், இவற்றின்மீது சிலுவையில் கிறிஸ்து வெற்றிசிறந்தார் (கொலோசெயர் 2:14ஆ, 15; 1 பேதுரு 3:22 ஆகியவற்றைக் காணவும்); அவற்றின் முடிவு ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளது (1 கொரிந்தியர் 15:24ஐக் காணவும்).

இந்தக் கூற்றில், "தூதர்கள்" மற்றும் "அதிகாரங்கள்" என்பவற்றின் ஒன்றிணை வானது, "ஆவிக்குரிய *எந்த* சக்தியும் தேவனுடைய அன்பினின்று நம்மைப் பிரிக்க வல்லமை கொண்டிருப்பதில்லை" என்று கூறுவதற்கான பவுலின் வழி யாக மாத்திரம் இருக்கலாம். "C. S. லூயிஸ் என்பவர் ஞானத்துடன் குறிப்பிட்ட வகையில், நாம் சாத்தானையும் அவனது கூட்டாளிகளையும் புறக்கணிக்கவோ அல்லது அவர்களுக்கு மிகவும் அதிகமான மதிப்பைத் தரவோ சாய்கிறோம்."[16]

*(5) நிகழ்காரியங்களானாலும் (6) வருங்காரியங்களானாலும்.* சிலர் நிகழ் காலத்தின் பிரச்சனைகளினால் மூழ்கடிக்கப்படுகிறவர்களாக இருக்கையில், மற்றவர்கள் எதிர்காலம் கொண்டுவர இருப்பவை பற்றி அஞ்சுகின்றனர். எவெரெட் ஹாரிஸ்ஸன் என்பவர், "சோதனைகள் மற்றும் துன்புறுதல்களுடனான நிகழ்காலமாயிருந்தாலும் அல்லது நிச்சயமற்ற தன்மையுடனான எதிர்காலமா

யிருந்தாலும்'' காலம் என்பது விசுவாசிகளுக்கு எதிராக வல்லமை அற்றதாக உள்ளது என்று விளக்கப்படுத்தினார்.[17] தேவன், "நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன்; திகையாதே, நான் உன் தேவன்; நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச் சகாயம்பண்ணுவேன்; என் நீதியின் வலதுகரத்தினால் உன்னைத் தாங்குவேன்" என்று கூறியிருக்கிறார் (ஏசாயா 41:10). நமது கையானது தேவனுடைய கரத்தில் இருக்கும்வரை, நாம் "உறுதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும்" நிலைத்திருக்க முடியும் (1 கொரிந்தியர் 15:58). எது நடந்தாலும் "[தேவன்] சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாக" நடப்பிக்கிறார் (ரோமர் 8:28). இவ்வாறு, "நிகழ்காலத்தில் நடக்கிறவையோ அல்லது எதிர்காலத்தில் நடக்க இருப்பவையோ'' (Phillips) அன்பான தேவனைவிட்டு நம்மைப் பிரிக்க முடியாது.

*(7) வல்லமைகள்.* "வல்லமைகள்'' என்பதற்கான கிரேக்க வார்த்தை, *dunamis* என்பதிலிருந்து வருகிறது. பவுல் ஆவிக்குரிய சக்திகளைக் குறிக்க, பொதுவாகப் பன்மை வடிவத்தைப் பயன்படுத்தினார்,[18] இது இச்சொற்றொடரை, ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ள "தூதர்கள்'' மற்றும் "அதிகாரங்கள்'' என்பவற்றோடு தொடர்புபடுத்துகிறது (KJV பட்டியலைக் காணவும்). இருப்பினும், முந்திய இரு சொற்றொடர்களும், கிறிஸ்தவர்களுக்கு எதிராக யுத்தத்தில் ஈடுபடுகிற ஆவிக்குரிய சக்திகள் எல்லாவற்றையும் சுற்றிவளைக்கப் போதுமானவையாக இருப்பதால், இவ்விடத்தில் பவுல் அந்த அசுத்த ஆவிகளுடைய கைப்பாவைகளைத் தமது சிந்தையில் கொண்டிருக்கலாம்: கிறிஸ்தவர்களைக் கொடுமைப்படுத்துகிற மனித ஆட்சியாளர்கள். அப்போஸ்தலர்கள் யூத அதிகாரிகளால், "இயேசுவின் நாமத்தைக்குறித்து எவ்வளவும் பேசவும் போதிக்கவும் கூடாதென்று" கட்டளையிடப்பட்ட நிகழ்வு (நடபடிகள் 4:18) என்ற உதாரணம் எனது சிந்தைக்கு வருகிறது. கிறிஸ்தவர்களை மிகவும் துன்புறுத்தி அடக்கும் சக்தியாக மாறிய ரோமப்பேரரசு இன்னொரு உதாரணமாக உள்ளது. நமது வாசகர்களில் சிலர், இவ்வகையான உபத்திரவத்திற்கு உட்படுதல் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது என்பதை அறிந்திருப்பார்கள். மனிதரீதியான அரசாங்கங்கள் உங்களைச் சிறையில் தள்ள வல்லமை கொண்டிருக்கலாம், ஆனால் அவைகள் உங்களைத் தேவனுடைய அன்பிலிருந்து பிரிக்க வல்லமை கொண்டிருப்*பதில்லை.*

*(8) உயர்வு மற்றும் (9) தாழ்வு.* "உயர்வு'' மற்றும் "தாழ்வு'' என்பவை பவுலின் பட்டியலிலுள்ள மிகவும் தெளிவற்ற விஷயங்கள் ஆகும். இவைகள், "அடையாளம் காண்பதற்கு மிகவும் கடினமான சொற்றொடர்களின் ஜோடி" என்று அழைக்கப்பட்டுள்ளன.[19] நான் இவ்வார்த்தைகளை வாசிக்கையில், சங்கீதம் 139ஐப் பற்றி நான் நினைத்துப் பார்க்கிறேன். சங்கீதக்காரர் நாம் எவ்வளவு உயரத்திற்குச் சென்றாலும் அல்லது நான் எவ்வளவு கீழே இறங்கினாலும், நாம் தேவனுடைய பிரசன்னத்திலிருந்து தப்பிக்க இயலாது என்று அறிவித்தார்:

> உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்?
> உம்முடைய சமூகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்?
> நான் வானத்திற்கு ஏறினாலும், நீர் அங்கே இருக்கிறீர்;
> நான் பாதாளத்தில் படுக்கைபோட்டாலும், நீர் அங்கேயும் இருக்கிறீர்.
> நான் விடியற்காலத்துச் செட்டைகளை எடுத்து,
> சமுத்தரத்தின் கடையாந்தரங்களிலே போய்த்தங்கினாலும்,
> அங்கேயும் உமது கை என்னை நடத்தும்,

உமது வலதுகரம் என்னைப் பிடிக்கும்
*(சங்கீதம் 139:7-10).*

சில எழுத்தாளர்கள், "உயர்வு" மற்றும் "தாழ்வு" ஆகியவற்றை உருவகக் கருத்தில் பயன்படுத்துவதைத் தேர்ந்துகொள்கின்றனர். அவர்கள் "வளமையின் உயர்வு" மற்றும் "பஞ்சத்தின் தாழ்வு" என்பவற்றைப் பற்றியோ,[20] அல்லது சந்தோஷத்தின் உயரம் மற்றும் சஞ்சலத்தின் தாழ்வு அல்லது வெற்றியின் உயரம் மற்றும் தோல்வியின் தாழ்வு ஆகியவற்றைப் பற்றிப் பேசுகின்றனர். "உயரங்களை அடைதல்" என்பதை நான் உருவகமாக நினைக்கையில், அமெரிக்க ஜனாதிபதி ஆவதற்கு முன்னர் கர்த்தருடைய சபையில் உறுப்பினரா யிருந்து, ஒரு பிரசங்கியாராகவும் மூப்பராகவும் ஊழியம் செய்த ஜேம்ஸ் A. கோர்ஃபீல்டு என்பவர் என் நினைவுக்கு வருகிறார். கோர்ஃபீல்டு, ஒரு இளம் பிரசங்கியாரால், ஒரு பிரசங்கத்திற்கு ஏற்ற வசனப்பகுதியை மேற்கோள் காண்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார். அவர் சங்கீதம் 17:15ஐ மேற்கோள் காண்பித்தார்: "நானோ நீதியில் உம்முடைய முகத்தைத் தரிசிப்பேன்; நான் விழிக்கும்போது, உமது சாயலால் திருப்தியாவேன்." விரைவிலேயே கோர்ஃபீல்டைக் கொலைசெய்தவரின் தோட்டா அவருடைய உயிரை இந்தவாழ்விலிருந்து பிரித்தது - ஆனால் அது தேவனுடைய அன்பிலிருந்து அவரைப் பிரிக்கவில்லை. "ஆழங்களுக்குச் செல்லுதல்" பற்றி நான் நினைக்கும்போது, சங்கீதக்காரரின் பின்வரும் அர்த்தம் நிறைந்த வார்த்தைகளை நான் மீண்டும் நினைவுக்குக் கொண்டுவருகிறேன்: "கர்த்தாவே, ஆழங்களிலிருந்து உம்மை நோக்கிக் கூப்பிடுவேன்" (சங்கீதம் 130:1).

சில எழுத்தாளர்கள், "உயர்வு" மற்றும் "தாழ்வு" என்பதற்கான கிரேக்கச் சொற்றொடர்கள் முதல் நூற்றாண்டின் தேவனற்ற ஜோதிடத் தத்துவங்களில் பயன்படுத்தப்பட்டன என்று குறிப்பிடுகின்றனர். "உயர்வு" என்பது, வானத்தில் தனது உயர்ந்த நிலையிலிருக்கும் நட்சத்திரத்தைக் குறிப்பிட்டது, மற்றும் "தாழ்வு" என்பது அதன் மிகத் தாழ்வான இடநிலையைக் குறித்தது. தேவனற்றவர்கள் நட்சத்திரங்களின் இடநிலையானது தங்கள் வாழ்வில் செல்வாக்குச் செலுத்தி, தங்கள் வாழ்வின் ஓட்டத்தைக்கூட இயக்கிற்று என்று நம்பினர். ஒருவேளை இப்படிப்பட்ட வினோதமான மதியற்ற சிந்தைகள் "உயர்வு" மற்றும் "தாழ்வு" என்ற சொற்றொடர்களில் உள்ளடக்கப்பட்டிருக்கலாம். ஏவுதல் பெற்ற பவுலின் வார்த்தைகள், மனிதகுலமானது இப்படிப்பட்ட சீரழிவான மூடநம்பிக்கையினால் அடக்கி ஒடுக்கப்படத் தேவையில்லை என்பதைத் தெளிவாக்குகின்றன. தேவனுடைய அன்பிலிருந்து நம்மை *ஏதொன்றும்* பிரிக்க முடியாது.

(10) *வேறெந்தச் சிருஷ்டியானாலும்.* இந்தப் பட்டியலிலுள்ள கடைசி விஷயமானது "இப்படிப்பட்டவைகள்" என்ற (கலாத்தியர் 5:21ஐக் காணவும்). பவுலின் சொற்றொடர், மற்றும் "முதலிய" என்ற பிடிப்பு வார்த்தை ஆகிய வற்றைப் போன்றதாக உள்ளது. பவுல் சற்றே தாமதித்து, "நான் எதையேனும் விட்டுவிட்டேனா? நல்லது அதை நான் பின்வரும் சொற்றொடரைக் கொண்டு எடுத்துரைக்க முடியும்: 'வேறெந்தச் சிருஷ்டியானாலும்' " என்று சிந்தித்தது போலுள்ளது. NCV வேதாகமத்தில், "anything else in the whole world" என்றுள்ளது.

*உங்கள் மிக ஆழ்ந்த அக்கறை அல்லது உங்கள் மாபெரும் பயம் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்.[21] சாத்தியமான மிகவும் மோசமான பேரழிவைப் பற்றிக் கற்பனை செய்து பாருங்கள். நீங்கள் எவ்வித இடர்ப்பாட்டை எதிர்கொண்டாலும், இவைகளாவது அல்லது "வேறெந்தச் சிருஷ்டியாவது ... நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று" அறியுங்கள். நீங்கள் தேவனுடைய அன்பின் வட்டத்தை விட்டு வெளியே ஒருக்காலும் வாழ முடியாது!*

*கல்வியாளரான* H. C. G. *மௌல் என்பவர் ரோமாபுரியிலுள்ள கொலோசியம் என்ற கட்டிடத்தை இரவு வேளையில் பார்வையிட்டார். அவரிடத்தில் யாரோ ஒருவர், "உங்களுக்கு நினைவுச் சின்னம் ஒன்று தேவையா? கொலோசியத்திலுள்ள மண்ணைச் சேகரித்து எடுத்துக்கொள்ளுங்கள்; அது வேதசாட்சிகளாக மரித்த எல்லாருடைய நினைவுச் சின்னமாக உள்ளது" என்றார். நிலவு வெளிச்சத்தில் மௌலும் அவரது நண்பர்களும் ரோமர் 8ன் முடிவுப் பத்தியை வாசித்தனர். பின்பு அவர்கள், "வாழ்விலும் மரணத்திலும், மிருகங்கள், மனிதர்கள் மற்றும் அசுத்த ஆவிகள் மீது தமது பரிசுத்தவான்களுக்கு வெற்றியை அருளியவருக்கு* [*தேவனுக்கு*] *நன்றி செலுத்தினர்."*[22]

### *பவுலின் பாதுகாப்பு (வசனம் 39ஆ)*

*நமது ஆவிக்குரிய மேட்டர்ஹார்ன் மலை உச்சியிலிருந்து கண்ணோக்குதல் என்பது பயபக்தியை ஏவுவதாக இல்லையா? இவ்விடத்தில் சற்றே நிதானியுங்கள்; 39ம் வசனத்தை மிக விரைவாக விட்டு வந்து விடாதீர்கள். பவுல் இவ்வசனத்தை, "கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு" என்று முடித்தார் (வசனம் 39ஆ). ரோமர் 8ன் பிரம்மிப்பூட்டும் வாக்குத்தத்தங்கள் "கிறிஸ்து இயேசுவுக்குள்" இருப்பவர்களுக்கு (8:1; 6:3, 4ஐக் காணவும்), ஆவியின்படி வாழ்பவர்களுக்கு (8:12, 13ஐக் காணவும்) மாத்திரமே உரியவை.*

*35 முதல் 39 வரையுள்ள வசனங்களின் சிந்தனைகளிலேயே களித்து அந்த உயர்வான தொனியிலேயே விட்டுச்செல்லுதல் என்பது ஆச்சரியம் நிறைந்ததாக இருக்கும். துரதிர்ஷ்டவசமாக, இவ்வசனங்கள் சிலரால், தேவனுடைய பிள்ளையாக உள்ளவர் இழந்துபோகப்படச் சாத்தியமே இல்லை என்று போதிக்க முயற்சி செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறாக, ஒரு சில கூடுதல் வார்த்தைகள் அவசியமானவைகளாக உள்ளன. எனது சகோதரர் காய் ரோப்பர், 38 மற்றும் 39ம் வசனங்களில் பவுல் பட்டியலிடாத இரு விஷயங்களைக் குறிப்பிட்டார்: பாவம் மற்றும் சுயம்.*[23] *பாவம் நம்மைத் தேவனிடத்திலிருந்து பிரிக்கிறது என்று வேதாகமம் போதிக்கிறது (ஏசாயா 59:1, 2) மற்றும் கிறிஸ்தவர்கள் பாவம் நிறைந்த வாழ்வுநடையை வாழத் தேர்ந்துகொள்ளக்கூடும் (யாக்கோபு 5:19, 20ஐக் காணவும்). இவ்வாறாக, மெக்கார்வி என்பவர் பின்வரும் தகுதியைக் கூடுதலாகக் கூறினார்: "(சீஷரின் சுயசித்தம்தவிர) ஏதொன்றும் அவரை தேவனுடைய அன்பிலிருந்து பிரிக்க இயலாது."*[24] *ஒரு சீஷர் தம்மைத் தேவனுடைய அன்பிலிருந்து பிரித்துக்கொள்ளுதல் என்பது சாத்தியமற்றதென்றால், யூதா "தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு ..." என்று எழுதியிருக்க மாட்டார் (யூதா 21அ).*

*இருப்பினும், நாம் எதிர்மறைக் கருத்துக்களில், வாசம்பண்ணாதிருப்போமாக. மாறாக, நாம் தேவனுடைய உண்மைநிறைந்த பிள்ளைகள் என்ற*

*வகையில், ஏதொன்றும் அவரது இணையற்ற அன்பிலிருந்து நம்மைப் பிரிக்க இயலாது என்பதில் அகம் மகிழக்கடவோம்!*

## முடிவுரை

*"பரிசுத்த வேதவசனங்களின் மேட்டர்ஹார்ன்" ஆக உள்ள ரோமர் 8:38, 39 வசனங்கள்: ரோமருக்கு எழுதிய நிருபத்தின் முதல் பாதியை முடிக்க என்னால் [இதைவிட] மிகச்சிறந்த வழியொன்றைப் பற்றி நினைக்க இயலவில்லை! இருப்பினும், ஒருவேளை எச்சரிக்கையின் வார்த்தையொன்று முறையானதாக இருக்கும். இவ்வசனத்தை நமது அன்றாட வாழ்வில் நடைமுறைப்படுத்தி, என்ன நடந்தாலும் தேவன் நம்மீது அன்புகூருகிறார் என்பதை உண்மையாகவே ஏற்றுக்கொள்ளுதல் என்பதைவிட, இவ்வசனப்பகுதியின் இலக்கிய அழகைப் பாராட்டுதல் என்பது மிகவும் சுபலமாக இருக்கும்! இவ்வசனப்பகுதி பற்றிய எனது குறிப்புகளில், நான் பின்வரும் சிந்தனையை உள்ளடக்கியிருக்கிறேன்: "இல்லம் என்பது இதைக் கற்றுக்கொள்ள வேண்டிய அவசியமான இடமாக உள்ளது. பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் சிந்தைகளில் இந்த சத்தியத்தை ஆழமாகப் பதிக்க வேண்டியது அவசியமாக உள்ளது: 'நமது வழியில் எந்த இடர்ப்பாடு வந்தாலும், தேவன் நம்மோடு இருக்கிறார்!" ஹெரால்டு ஹேசெலிப் என்பவர், "ஒருவர் வேதவசனங்களின் இரண்டு மூன்று சுருக்கமான வசனப்பகுதி களை மாத்திரம் மனனம் செய்யப்போகிறார் என்றால், இவ்வசனங்கள் [ரோமர் 8:35-39] அவற்றில் உள்ளடக்கப்பட வேண்டும்" என்று எழுதினார்.[25] பின்வரும் ஆலோசனையைக் கூடுதலாகத் தர என்னை அனுமதியுங்கள்: இவற்றை மனனம் செய்வதோடு, இவற்றை உங்கள் வாழ்வின் வெளிக்கண்ணோக்கின் பாகமாக்கிக் கொள்ளுங்கள்.*

## பிரசங்கியார்கள் மற்றும் போதகர்களுக்கான குறிப்புகள்

*தேவனுடைய வாக்குத்தத்தங்கள் கிறிஸ்துவின் "மூலமாகவும்" கிறிஸ்து வுக்கு "உள்" இருப்பவைகளாகவும் உள்ளன என்று இந்தப்பாடம் இருமுறை வலியுறுத்துகிறது. நீங்கள் இந்தப் பாடத்தைப் போதிக்கும்போது, ஒருவர் கிறிஸ்துவின் அங்கமாவது எப்படி என்பதைக் குறிப்பிடுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் (ரோமர் 6:3, 4; கலாத்தியர் 3:26, 27).*

*உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு மேட்டர்ஹார்ன் பற்றித் தெரியா தென்றால், நீங்கள் அவர்களுக்குப் பழக்கமான வேறொரு கம்பீரமான மலை யுச்சியை [உதாரணமாக எவரெஸ்டு சிகரத்தை] இவ்விடத்தில் பதிலியாகப் பயன்படுத்த விரும்பலாம்.*

*இந்தப் பாடத்திற்கான தொடக்க இடமானது நீண்டகாலத்திற்கு முன்பு பிரசங்கிக்கப்பட்ட ஒரு பிரசங்கத்தின் முழுமையற்ற குறிப்புகளாக இருந்தது. இதற்கான கருத்தும் இந்தப் பாடத்தின் சில விஷயங்களும் நீண்டகால மாக மறக்கப்பட்டுள்ள ஒரு ஆதாரமூலத்திலிருந்து வந்திருக்கலாம். நீங்கள் அந்த ஆதாரமூலத்தைப் பற்றி உணர்ந்தறிந்தால், தயவுசெய்து எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.*

குறிப்புகள்

[1]John R. W. Stott, *The Message of Romans: God's Good News for the World,* The Bible Speaks Today series (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1994), 246. [2]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 17. [3]Ibid., 27. [4]William Hendriksen, "Expositon of Paul's Epistle to the Romans," *New Testament Commentary* (Grand Rapids, Mich.: Baker Book House, 1982), 290. [5]Vine, 468. [6]Larry Deason, *"The Righteousness of God": An In-depth Study of Romans,* rev. (Clifton Park, N.Y.: Life Communications, 1989), 240. [7]*இது தொடக்ககால சபையில் ஏவுதல் பெற்றிராத பலத்த பாரம்பரியக் கூற்றின்படி யானதாகும்.* [8]*இஸ்ரவேல் மக்களின் விடாப்பிடியான பாவமும் அதனுடன் இணைந்திருந்த மனஸ்தாபமற்ற நிலையும்தான், அவர்கள் பாபிலோனிய அடிமைத்தனத்தில் துன்புறும்படித் தேவன் அனுமதித்திருந்தமைக்கான முதன்மைக் காரணமாக இருந்தது. அடிமைத்தனமானது அவர்கள் தேவனுடைய விசேஷித்த மக்களாக இருந்தமையுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பிணைக்கப்பட்டிருந்தது.* [9]*உங்கள் உரையைக் கேட்பவர்கள்* "hyper" *என்ற வார்த்தைக்குப் பழக்க மானவர்களாயிருந்தால்,* ("hyperactive" *என்பதிலுள்ளது போன்ற வகையில்) அதை ஒரு விவரிப்பாக நீங்கள் பயன்படுத்த முடியும்.* [10]*உலகத்தின் சிலபாகங்களில்* Nike *என்பது பிரபலமான விளையாட்டுவேளைக்கான காலணியாக உள்ளது. நீங்கள் வாழும் இடத்தில் அது உண்மையென்றால், நீங்கள் nike என்பது "வெற்றி" என்பதற்கான கிரேக்க வார்த்தையாக உள்ளது என்பதைக் குறிப்பிட முடியும்.*

[11]C. E. Macartney, quoted in Paul Lee Tan, *Encyclopedia of 7,700 Illustrations* (Rockville, Md.: Assurance Publishers, 1979), 520. [12]*இவ்விடத்தில் பவுல் கடந்தகால வினைச் சொல்லைப் பயன்படுத்தியது ஏன் என்று நாம் நிச்சயமாக அறிவதில்லை. ஒருவேளை அவர் சிலுவையில் கிறிஸ்துவின் அன்பின் வெளிப்பாட்டை தமது சிந்தையில் முதன்மை யாகக் கொண்டிருக்கலாம். ஒருவேளை, அவர் கர்த்தருடைய அன்பு நிலையானது மற்றும் அது மாற்றப்பட இயலாதது என்பதை மட்டும் வலியுறுத்த விரும்பியிருக்கலாம்.* [13]KJV *வேதாகமம், "வல்லமைகள்" என்ற வார்த்தையை "தேவதூதர்கள்" மற்றும் "அதிகாரங்கள்" ஆகியவற்றுடன் குழுப்படுத்துகிறது. இலேசான இந்த வரிசைமுறை மாறுபாடு, பவுல் சுட்டிக்காட்டும் கருத்தில் எந்தச் செயல்விளைவையும் கொண்டிருப்ப தில்லை.* [14]J. W. McGarvey and Philip Y. Pendleton, *Thessalonians, Corinthians, Galatians and Romans* (Cincinnati: Standard Publishing, n.d.), 371. [15]*பவுல் தவறைப் போதிக்கிறவர்கள் போன்ற (மத்தேயு 24:11, 12ல் குறிப்பிடப்பட்டவர்கள் போன்ற) மனித தூதுவர்களைக் குறிப்பிட்டார் என்று சில எழுத்தாளர்கள் நினைக்கின்றனர். இந்தத் "தூதுவர்கள்" கிறிஸ்துவுக்காக நாம் வாழ்வதை ஊக்கங்குலைக்க முயற்சி செய்யும் தவறான நண்பர்கள் என்று மற்றவர்கள் அடையாளப்படுத்துவார்கள்.* [16]Douglas J. Moo, *Romans,* The NIV Application Commentary (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 2000), 287. [17]Quoted in Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 341. [18]*1 கொரிந்தியர் 15:24; எபேசியர் 1:21; 1 பேதுரு 3:22ஐக் காணவும்; மூலவசனப் பிரதியில் இவ்வசனங்கள் dunamis என்பதின் பன்மைச்சொல்லைப் பயன்படுத்துகின்றன.* [19]Moo, 284. [20]John Locke; quoted in James Burton Coffman, *Commentary on Romans* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1973), 324.

[21]*இதை உங்கள் உரையைக் கேட்பவர்களின் மத்தியில் பொதுவாக உள்ள குறிப்பிட்ட பயங்கள் பற்றிக் கூறித் தனித்துவமானதாக்குங்கள்: போர்கள், தீவிர வாதிகள், அணு உட்கருக் குண்டுகள், இயற்கைப் பேரழிவுகள், சுற்றுச்சூழல் கவலைகள், மிகவும் பரவலாகும் விவாகரத்து, தாழ்நிலையிலுள்ள ஒழுக்கம் அல்லது சபையிலுள்ள பிரச்சனைகள்.* [22]Handley C. G. Moule, *The Epistle of St. Paul to the Romans,* 10th ed., The Ex-

positor's Bible (London: Hodder and Stoughton, 1894), 242-43. [23]Coy Roper, "The Transformed Life," *Truth for Today* (August 1988): 14. [24]McGarvey, 371 (emphasis mine). [25]Harold Hazelip, *Discipleship,* The 20th Century Sermons Series (Abilene, Tex.: Biblical Research Press, 1977), 160.